திரு. கே. ஆர். சுந்தரம் : தலைவர் அவர்களே, குடியாத்தத்திலே உள்ள கரும்பு ஆராய்ச்சிப் பண்ணை நிறுவப்பட்டு பல ஆண்டுகள் ஆகின்றன. அதற்குப் பிறகு அந்த இடத்திலே மூன்று கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. ஆகவே கரும்பு விஸ்தரிப்பு அதிகமாக ஆகி இருப்பதால் அந்த ஆராய்ச்சிப் பண்ணையையும் விஸ்தரிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு செய்யுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அந்த ஆராய்ச்சிப் பண்ணை வேளாண்மைப் பல்கலைக் கழகத்தாலே நடத்தப்படுவதாகும். அங்கே ஆராய்ச்சிக்குத் தேவையான அத்தனை வசதிகளும் இப்போது இருக்கின்றன. எனவே அதை விரிவு படுத்த வேண்டிய தேவையில்லை.

திரு. இல. பலராமன் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அளித்துள்ள பதிலில் அதனை விரிவுபடுத்தவேண்டிய தேவையில்லை என்று சொன்னார்கள். அங்கே என்னென்ன ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன. அந்த ஆராய்ச்சிகளின் பயனாக இதுவரையில் அடைந்த நன்மைகள் என்னென்ன? புதிய கரும்புகள் எத்தனை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அதிக மகசூல் தரக்கூடிய ரகங்கள், மாவட்டங்களுக்கேற்ற சாகுபடி முறைகள் இவைகளுக்காகத்தான் ஆராய்ச்சி கூட்டங்கள் நிறுவப்பட்டு அவை செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. குடியாத்தம் ஆராய்ச்சிப் பண்ணையில் நோய் வராத கரும்புவிதைக் கருணைகளை அதிக அளவில் உற்பத்தி செய்து வடாற்காடு மாவட்டத்தில் வினியோகிக்கின்ற முழுத்திட்டம் அமல்படுத்தப்பட்டு வருகின்றது. இந்தத் திட்டத்தின்படி விதைக் கருணைகளை நீராவியால் பக்குவப்படுத்த போதுமான வசதிகள் அங்கே இருக்கின்றன. ஆகவேதான் அதை விரிவு படுத்தத் தேவையில்லை.

ஆடுதுறையில் விவசாயக் கல்லூரி ஏற்படுத்தும் திட்டம்.

*வினா எண். 148—திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல் ஆராய்ச்சிப்பண்ணை, வாழை ஆராய்ச்சிப் பண்ணையுள்ள ஆடுதுறையில் விவசாயக் கல்லூரி ஏற்படுத்தும் எண்ணம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது திறக்கப்படும்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

1981 செப்டம்பர்]

திரு. செ. இராமலிங்கம் : தலைவரவர்களே, ஆடுதுறையில் தற்போது நில ஆராய்ச்சி பண்ணை இருக்கின்றது. அங்கே வாழை ஆராய்ச்சிப் பண்ணை இருக்கிறன்து. ஆடுதுறையை ஒட்டிய பகுதிகளில் தேவையான நன்செய், புன்செய் நிலங்கள் இருப்பதால் தமிழகத்திற்கு உணவு அளிக்கின்ற தஞ்சை மாவட்டத்திலே இருக்கின்ற ஆடுதுறை வேளாண்மை ஆராய்ச்சிப் பண்ணையை வேளாண்மைக் கல்லூரியாக மாற்ற அரசு மறுபரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, ஆராய்ச்சிப் பண்ணை இருக்கும் இடத்திலேயெல்லாம் கல்லூரி அமைக்க முடியாது. வேளாண்மைக் கல்லூரியிலிருந்து 400 வேளாண்மைப் பட்டதாரிகள் ஆண்டுதோறும் வருகிறார்கள். அவர்களுக்குத்தான் வேலைவாய்ப்பு கொடுக்க முடிகிறது. அதிகப்படுத்தினால் வேலையில்லாத் திண்டாட்டம் உண்டாகும்.

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, எனக்குக் கிடைத்த தகவலின்படி இன்றுவரை வேளாண்மைப் பட்டதாரிகள் வேலையில்லாமல் இல்லையென்று கருதுகிறேன். எனவே, இந்த நிலைமைகளைக் கருத்திற் கொண்டு செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பி.எஸ்ஸி. (பாட்டனி), பி.எஸ்ஸி. (ஸூவாலஜி), படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கிறார்கள். பி.எஸ்ஸி. (அக்ரி.) படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கலாம். எனவே, இதைப்பற்றி மீண்டும் மறுபரிசீலனை செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, இன்றிருக்கின்ற நல்ல நிலையை நாளைக்குக் கெடுக்க வேண்டாம் என்பதுதான் அரசின் எண்ணம்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

குளத்தூர் தாலுகா பேரம்பூர் கிராமத்திலுள்ள பாலத்தினை புதுப்பிக்கும் திட்டம்.

*வினா எண். 149—திரு. த. மாரிமுத்து : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம் குளத்தூர் தாலுகா களமாவூர்-விராலிமலை செல்லும் சாலையில் (பேரம்பூர் கிராமத்தில்) உள்ள பாலத்தை புதிதாக கட்ட மதிப்பீடு தயார்செய்து அரசுக்கு அனுப்பப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?